# SUMMATIVE ASSESSMENT

## SECOND TERM EXAMINATION – (MARCH - 2014)

STD : IX MAX. MARKS : 90
SUB : TAMIL TIME : 3 HRS

* Please check that this question paper contains 12 printed pages.
* Please write down the serial number of the question before attempting it

இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

**This question paper is divided into four sections**

| | | | |
|---|---|---|---|
| பிரிவு : அ | படித்தல் | 15 மதிப்பெண்கள் |
| Section : A | Reading comprehension | 15 Marks |
| பிரிவு : ஆ | எழுதுதல் | 20 மதிப்பெண்கள் |
| Section : B | Writing | 20 Marks |
| பிரிவு : இ | இலக்கணம் | 15 மதிப்பெண்கள் |
| Section : C | Grammar | 15 Marks |
| பிரிவு : ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | 40 மதிப்பெண்கள் |
| Section : D | Literature / Text Books | 40 Marks |

# பிரிவு - அ

1. **கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக?** 5

வெப்பநிலையை ஒழுங்கு படுத்துவது கடல்கள் தாம். கடலின் சராசரி ஆழம் 12480 அடிகள் என்று கடலியல் வல்லுநர் கணக்கிட்டுள்ளனர். கடல் நிலத்தை விட மெதுவாக வெப்பமடையும். கடற்காற்று , நிலக்காற்று ஆகியவை பற்றிப் புவியியலில் விளக்கமாகப் படிக்கலாம். வணிக வளர்ச்சிக்கும் போக்குவரத்திற்கும் இன்றியமையாததாக விளங்கெளம் கடல் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைநிற்கிறது. கடலின் ஆழத்தில் முதல் 1200 அடி ஆழம் வரையில் வெப்பம்

துணைநிற்கிறது. கடலின் ஆழத்தில் முதல் 1200 அடி ஆழம் வரையில் வெப்பம் மிகவும் வேகமாகக் குறையும். 7200 அடி ஆழம் வரையில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். அதற்குக் கீழே பெரும்பாலும் வெப்ப நிலையில் வேறுபாடு இருக்காது. கடலின் சராசரி வெப்பம் சுமார் 39 பாரன்ஹீட் ஆகும்.

(i) கடலின் பணி

(அ) ஆழிப்பேரலையை உருவாக்குவது

(ஆ) பூமியின் தட்பவெப்பநிலையை ஒழுங்குபடுத்துவது

(இ) காற்றை உருவாக்குவது

(ஈ) ஆறுகளை ஏற்பது

(ii) கடலின் சராசரி ஆழம்

(அ) சுமார் 1200 அடிகள் (ஆ) 12480 அடிகள்

(இ) 7200 அடிகள் (ஈ) 10000 அடிகள்

(iii) வெப்பநிலை எத்தனை அடி ஆழத்தில் மாறுபடாமல் கடல் விளங்கும்

(அ) 50000 அடிக்குக் கீழ் (ஆ) 7200 அடிக்குக் கீழ்

(இ) ஆயிரம் அடிக்குக்கீழ் (ஈ) மாறுபடும்

(iv) கடலின் பயன்

(அ) போக்குவரத்துக்கு உதவுதல் (ஆ) நவரத்தினங்கள் தருதல்

(இ) அழித்தல் (ஈ) காத்தல்

(v) கடல் நிலத்தை விட எவ்வாறு வெப்பமடையும்?

(அ) மெதுவாக (ஆ) விரைவாக

(இ) உடனே (ஈ) அடிக்கடி

## 2. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக? 5

நாம் பிறரை எவ்விதப் பேதமின்றி அன்புடன் பாவித்து மதிக்க வேண்டும். அன்பற்று மற்றவரை நோக்கும் போது பேதம் தோன்றும். சுவாமி இராம்தீர்த்தர் இவ்வுண்மையை ஒரு கதை வடிவில் விளக்குகின்றார். ஒரு கண்ணாடி மாளிகைக்குள் நாய் ஒன்று நுழைந்தது. அதற்குள் நுழைந்ததும்பதிக்கப்பட்ட காண்ணாடிகளில் எல்லாம்நாயின் பிம்பங்களே தெரிந்தன. நாய் அவற்றைத் தனக்குப் பகையான நாய்கள் என்றெண்ணி முறைத்தது. நாய் பிம்பங்கள் எல்லாம் அதனைப் பார்த்து முறைத்தன. தன்னைப் பகைநாய்கள்பல சூழ்ந்து கொண்டுவிட்டன என எண்ணிய நாய் அப்பிம்பங்களைக் கண்டு குரைத்தது. உடனே அதன் எதிரொலி கேட்டுப் பல நாய்கள தன்னை எதிர்ப்பதாகப் புரிந்து கொண்ட நாய் மேலும் வலுவுள்ள மட்டும் குரைத்தது. குரைத்து குரைத்து இறுதியில் உயிரையே விட்டுவிட்